| Liberté • Égalité • Fraternité<br>RÉPUBLIQUE FRANÇAISE<br>MINISTÈRE DE LA JUSTICE | 8<br>**உரிமைகள் பிரகடனம்**<br>**ஒரு விசாரணை நடைபெறும் போது தற்காலிக காவலில் வைக்கபட்டவருக்கு கொடுக்கப்படும்** |
|---|---|

நீங்கள் சுதந்திரம் மற்றும் காவல் நீதிபதியால் தற்காலிக காவலில் வைக்கபட்டிருகிறீர். இந்த ஆவணத்தில் உங்களுக்கு இருக்கிற பிரதான உரிமைகளை மற்றும் உங்களுக்கு கொடுக்கவேண்டிய பிரதான தகவலையும். நினைவுபடுத்துகிறது

***<u>நீங்கள் காவலில் இருக்கும் காலம் முற்றிலும்.இந்த ஆவணத்தை வைத்து கொள்ளலாம்</u>***

## குற்றத்தை பற்றி அறிவது

நீங்கள் சம்மந்தப்பட்ட இந்த குற்றத்தின் சட்ட குறிப்பு, நடைபெற்ற திகதி மற்றும் நடைபெற்ற இடத்தை தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. அத்துடன் தற்காலிக காவலில் வைக்க படுவதற்கு உள்ள காரணங்களையும் நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

## ஒரு வழக்கறிஞரால் உதவி

இந்த வழக்கு நடைபெறும் வரை, நீங்கள் தேர்ந்தெடுத்த அல்லது அரசாங்கம் கொடுக்கின்ற ஒரு வழக்கறிஞரின் உதவியை நாடலாம்.

நீங்கள் சுதந்திரமாக வழக்கறிஞருடன் உரையாடலாம் அல்லது கடிதம் அனுப்பலாம், மற்றும் அவர் உங்கள் எல்லா விசாரணைகளுக்கும் வரலாம், விசாரணை நேரத்தை அவருக்கு தெரிவிக்க வேண்டும்.

*நீங்கள் சிறுவராக இருந்து மற்றும் நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தினர் ஒரு வழக்கறிஞரை தேர்ந்தெடுக்கவில்லை என்றால், உங்களுக்கு அரசாங்கம் ஒரு வழக்கறிஞரை நியமிக்கும்.*

## மௌனத்தை கடைபிடிக்கும் உரிமை

உங்கள் விசாரணை நேரத்தில், அறிக்கை அளிப்பதா, உங்களை கேட்கபோகிற கேள்விகளுக்கு பதிலளிப்பதா அல்லது மௌனமாக இருப்பதா என்று நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

## ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி

நீங்கள் பிரெஞ்சு மொழியை பேசுபவர் அல்லது புரிந்து கொள்பவராக இல்லை என்றால், உங்கள் விசாரணைக்கும், உங்கள் வழக்கறிஞர் உடன் முறையிடவும் உங்களுக்கு இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவி கேட்க உரிமை இருக்கிறது.

## உங்களை விடுவிக்க கேட்கும் உரிமை

எந்நேரமும் உங்களை விடுவிக்க நீங்கள் நீதிபதியிடம் கோரிக்கை வைக்கலாம். அந்த கோரிக்கையை அந்த நீதிபதி மற்றும் சுதந்திர மற்றும் காவல் நீதிபதி பார்ப்பார்கள்.

## சுதந்திரத்தை இழப்பு கால அளவு

தற்காலிக காவலில் இருக்கும் நேரம், நீங்கள் வயது உள்ளவர் அல்லது சிறுவராக இருப்பதை பொறுத்து மாற கூடும், உங்கள் மீது இருக்கும் குற்றசாட்டு, குற்றமா அல்லது சட்ட விரோதச் செயலா, என்ற தீவிரத்தை பொறுத்து, மற்றும் நீங்கள் முன்பே கடந்த காலத்தில் தண்டிக்கபட்டவரா என்பதை பொறுத்திருக்கிறது.

அந்த கால அளவு உங்களை காவலில் வைத்த நீதிபதியின் தீர்ப்பில் குறித்திருக்கும்.

சில நேரங்களில், உங்கள் காவல் நேரம் அதிகரிக்கலாம். அந்த அதிகரிப்பை பற்றி, நீங்களும் உங்கள் வக்கீலும் எதிர்ப்பான விவாதத்தின் பிறகு தான் முடிவெடுக்கபடும்.

## சில நபருக்கு தெரிவிப்பது

உங்களுக்கு விருப்பப்பட்ட நபருக்கு குறிப்பாக உங்கள் குடும்பத்தை சேர்ந்தவருக்கு நீங்கள் தற்காலிக காவலில் இருப்பதை தெரிவிக்கலாம்.

உங்கள் நாட்டின் தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம், நீங்கள் வெளிநாட்டை சேர்ந்தவராக இருந்தால்.

## மருத்துவ பரிசோதனை

நீங்கள் ஒரு மருத்துவ பரிசோதனை கேட்கலாம்.

## உங்கள் கோப்பை பார்க்க

உங்கள் வழக்கறிஞர் வழியாக உங்கள் விசாரணை கோப்பு நகலை எடுக்க உங்களுக்கு உரிமை இருக்கு உங்கள் கோப்பின் சில பகுதிகள் உங்கள் கைக்கு வர கூடாது என்று நீதிபதி, பாதிக்கப்பட்டவர்கள் , இந்த வழக்கில் விசாரிக்க படுவோர், அவர்களின் வழக்கறிஞர்கள், சாட்சிகள், புலனாய்வாளர்கள், நிபுணர்கள், அல்லது இந்த விசாரணை சம்மந்த பட்ட மற்ற எந்த நபராக இருந்தாலும், மிரட்டல்களுக்கு ஆளாக கூடாது என்பதை எண்ணி, உத்தரவிடலாம்.